★ பி. பி. ஸி விமர்சனம்

# துருப்புக்கள் கரையில் இறக்கப்பட்டமை முகாமின் நெருக்கடியைக் காட்டுகிறது

ஆனையிறவு முகாமுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலை இன்னமும் ஏற்படவில்லை எனக் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் கூறிவருகின்றபோதிலும், முகாமுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை இராணுவத்தினர் எடுக்கும் தற்போதைய நடவடிக்கைகள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது. இவ்வாறு ஆனையிறவில் நடைபெற்று வரும் மோதல்கள் குறித்துக் கருத்து வெளியிட்ட பி. பி. ஸி நேற்றுக்குறிப்பிட்டது. மற்றுமோர் முனையில் துருப்புகளைக் கரையிறக்கி இன்னுமோர் போர் முனையை புலிகளுக்கு எதிராகத் திறப்பதே இராணுவம் தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கை எனத் தெரிகிறது, எனக் குறிப்பிடும் பி. பீ. ஸி தற்போது இறக்கப்பட்டுள்ள படையினர். ஆனையிறவை நோக்கி முன்னேற முயற்சிப்பின் புலிகளால் ஏற்கனவே புதைக்கப்பட்ட மிதி வெடிகளில் சிக்க வேண்டி ஏற்படலாம் எனக் குறிப்பிட்டது (இதைக் கொழும்பில் பாதுகாப்பு

—04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 230 பிரசோற்பத்தி ஆனி 32 ( 16 - 07 - 1991 ) செவ்வாய்

# முகாமைச் சூழவிருந்த இராணுவத்தினரின் கண்ணி வெடிகள் புலிகளால் நீக்கப்பட்டன

தொடர்ந்து ஆறாவது நாளாக ஆனையிறவு பிரதான முகாம் மீது தாக்குதல் நடாத்திவரும் விடுதலைப் புலிகள் நேற்று பிரதான முகாமைச் சூழவிருந்த மிதிவெடிகளையும், கண்ணி வெடிகளையும் அகற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் நேற்றுப் பகல் மோதல்கள் சற்றுத் தணிந்து இருந்ததாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை முகாம் பகுதியில் நேற்று விமானத் தாக்குதல் வழமைபோலவே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பிரதான முகாமைச் சூழப் படையினர் ஏற்கனவே புதைத்திருந்த மிதிவெடிகள், கண்ணிவெடிகளை விடுதலைப் புலிகள் அகற்றும் போது முகாமில் இருந்து பெருமளவிலான எதிர்த்தாக்குதல் எதையும் படையினர் மேற்கெகள்ளவில்லை எனக் கூறப்படுகிறது. இரவு மீண்டும் மோதல் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 79

# புலிகளின் கடும் தாக்குதலில் கரையிறங்கிய படை சிக்கியது

## அதிகாரி உட்பட பல சிப்பாய்கள் பலி

நேற்று முன்தினம் கட்டைக்காடு கடற்கரையில் இறக்கப்பட்ட படையினருக்கு உதவியாக நேற்றும் மேலதிகமாகப் படையினர் அங்கு இறக்கப்பட்டனர். இவர்கள் நேற்று மாலை 2 · 30 மணியளவில் ஆனையிறவை நோக்கி முன்னேற முற்பட்டனர் இவர்களை வழிமறித்து விடுதலைப்புலிகள் உக்கிரமான போரைத்தொடுத்தனர்.

படையினர் சிறிதும் நகர முடியாதவாறு புலிகள் பாரியளவிலான தாக்குதலைத் தொடுத்தனர். இதனால் படையினர் தரப்பில் பல சிப்பாய்கள் பலியாகினர், ஓர் இராணுவ உயரதிகாரியும் கொல்லப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

படையினருக்கு உதவியாக

—04 ஆம் பக்கம் பார்க்க

## கரையில் இறங்கிய படையில் 3 படைப்பிரிவுகள்

இராணுவத்தின் கிழக்குப் பிரிவைச் சேர்ந்த இரு படையணிகள் வடமராட்சி கிழக்கில் கரையிறங்கியுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

இப்படைப்பிரிவுகளில் முதலாம், இரண்டாம் கஜபாகு பிரிவும் முதலாவது சிங்கரெஜிமன்ட்டும், மூன்றாவதுத்ரைப் படையும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்படையினர் ஆனையிறவு முகாமினுள் சிக்கியுள்ள படையினரை மீட்கும் முயற்சியில் ஈடுபடவுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன,

கரையிறங்கும் முயற்சியில் நடைபெற்ற மோதலில் 4 படையினர் பலியானதாகவும் 18 படையினர் காயமடைந்ததாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## வவுனியா நகரப் பகுதியில் துருப்புக்கள் உஷார் நிலையில்

வவுனியாப்பகுதியில் பெருமளவு துருப்புக்கள் கடந்த வாரம்முதல் உஷார்நிலையில் வைத்திருப்பதாக வவுனியாவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்துருப்புக்கள் வவுனியா-யாழ் வீதியைநோக்கி எந்நேரமும் ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆயத்தமாகவுள்ளனர்.

இவர்களுக்கு உதவியாக மருத்துவப்பகுதியினரும், அம்புலன்ஸ் வாகனங்களும் அனுராதபுரம் மற்றும் வவுனியாப் பகுதிகளிலும் வைக்கப்பட்டுள்ளனர். என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இருமாதங்களுக்கு முன்னர் வவுனியா - யாழ் வீதியைக் கைப்பற்றும் நோக்குடன் மூவாயிரத்திற்கும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வை - 12 விமானங்கள் இளநீர் போடுகின்றன!

ஆனையிறவு இராணுவ முகாம் படையினருக்கு குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக வை - 12 விமானங்கள் மூலம் தேங்காய்களும், இளநீர்களும் சாக்குகளில் கட்டப்பட்டு போடப்படுகின்றன.

இப் பொதிகளில்பெரும்பகுதி புலிகளின் காவலரண் பகுதிகளிலும், கடற்கரைப்பகுதிகளிலும் விழுவதாக அங்கிருந்து வரும் செய்திகள்தெரிவிக்கின்றன.

ஆனையிறவு இராணுவ

— 04 ஆம் பக்கம் பார்க்க

## குடாநாட்டில் அஞ்சலி

ஆனையிறவு இராணுவ முகாமில் படையினருக்கு எதிரான மோதலில் களப்பலியான வீரவேங்கைகளுக்கு யாழ் குடாப் பகுதியெங்கும் நேற்றும் அஞ்சலி செலுத்தும் முகமாக வாழை, தோரணங்களினாலும் சிவப்பு - மஞ்சள் கொடிகளினாலும் அலங்கரிக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ அதிகாரி

## விமானங்களைத் தாக்கும் ஆயுதங்கள் வைத்துள்ளனர்

ஆனையிறவில் பதிவாகப் பறக்கும் விமானங்களையும், ஹெலிகப்டர்களையும் விடுதலைப் புலிகள் கடுமையாகத் தாக்கி வருவதாக இராணுவ

—04 ஆம் பக்கம் பார்க்க

## எல்லைக் கிராம மோதல் 6 படையினர் பலி

அநுராதபுரம் எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் 6 படையினர் பலியாகியுள்ளனர்

அநுராதபுரம் - திருமலை எல்லை நகரான இராணகபுர கிராமத்தில் நடைபெற்ற மோதலிலேயே இப்படையினர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(...ற்றைய தொடர்ச்சி)

# உழைப்பால் உயர்ந்த தவில் மேதை சின்னராசா

ஆங்கிலத்தில் ''Permutation and Combination'' என்று கூறப்படும் வரிசைமாற்று ஒழுங்கமைவு, தொகையடுக்கு ஒழுங்கமைவு என்ற ரீதியில் கற்பனா வடிவங்களை உடனுக்குடன் உருவாக்கி வாசிக்கும் திறமை பெற்றவர் சின்னராசா அவர்கள். ''அனுலோமம்'' எனத் தாளப்பிரயோகத்தில் ஒரு முறையுண்டு. வாசிக்கத் தொடங்கிய காலப்பிரமாணம் நிலையாயிருக்க, சங்கதிகளைப் பல்வேறு காலப்பிரமாணங்களில் மாற்றி மாற்றி வாசிப்பது இந்தமுறையாகும். இந்த மாதிரியான லய நுணுக்கங்களில் மிகவும் கூர்மையாகச் செயற்படுபவர் சின்னராசா அவர்கள்.

லயநுணுக்கங்களில் யாரும் இவரிடம் இலேசாகத் தப்பிவிடவும் முடியாது ஏமாற்றவும் முடியாது. புதிதாக ஏதாவதொரு சொற்கட்டையோ, சங்கதியையோ ஒருவர் வாசிக்கும் பொழுது கண்ணுக்குள் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருப்பது போல் கூர்ந்த அவதானத்துடனிருந்து கணக்குப் பண்ணிக் கொள்ளுவார். அதில் ஒரு மாத்திரைக்காலம், அல்ல, கால்மாத்திரைக்காலம் தவறாக இருந்து விட்டால் போதும் ''இதுக்கு என்ன கணக்கு என்று சொல்லுங்கோ'' என்று முகத்திலடித்தாற் போல் கேட்டு விடுவார்.

ஆனால், ஒருவர் விவேகமான முறையில், புதிதாக வாசிக்கும் விஷயம் எதுவாயிருந்தாலும் அது லயபாவத்துடன் அமையுமிடத்து திறந்த உள்ளத்துடன் பாராட்டி உற்சாகப்படுத்துவார். இவருடைய இந்தப் பண்பை வளர்ந்து வரும் இளங்கலைஞர்கள் தொடக்கம் அனுபவமிக்க கலைஞர்கள் வரை எல்லோரும் போற்றுவர்.

ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம்தவில் வாசித்த சின்னராசா அவர்கள் கண்ட மேடைகள் எண்ணற்றன. எண்ணிலடங்காத ஆலயஉற்சவங்கள், திருமணங்கள், மற்றும் மங்கள வைபவங்கள் எல்லாவற்றிலும் தவில் வாசித்த இவர் பெற்ற பாராட்டுக்கள் அனந்தம். வாழ்க்கையில் தான் ஒரு சாதாரண நிலையிலிருந்து எல்லா வசதிகளையும் பெற்று வாழும் நிலைக்கு வந்தது தனது இடைவிடா முயற்சியினாலேயே என அடிக்கடி எல்லோருக்கும் கூறிப் பெருமைபடுவார்.

சங்கீதக் கலைக்குத் தன்னை முழுதாக அர்ப்பணித்த சின்னராசா அவர்கள் அதன் மூலம் எண்ணற்ற மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தார். 'கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்ற முதுமொழிக்கிணங்க அவருக்குப் படித்தவர்கள் தொடக்கம் பாமரர்வரை எண்ணற்ற மக்களின் அறிமுகம் கிடைத்தது. பல உயர் அதிகாரிகள் தொடக்கம் அரசியல்வாதிகள், தலைவர்கள், அமைச்சர்கள் ஆகியோர் வரை பல்வேறு தரத்திலுமுள்ள மக்களின் ஆதரவு இவருக்கிருந்ததால் எதையும் சாதிக்கக் கூடிய வாய்ப்பு அவருக்கிருந்தது. இத்தகைய செல்வாக்கினால் தனக்கு வேண்டியவர், வேண்டாதவர், செல்வந்தர், ஏழை, தெரிந்தவர், தெரியாதவர் என்ற வித்தியாசம் இல்லாமல் அவர்கட்கு வேண்டிய விடத்துத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்யும் பண்பு இவரிடம் இருந்தது. பொதுவாக இசை வேளாளர்களிடையே மற்றவர்களை உபசரிக்கும் பண்பு அதிகமாக இருப்பதை நாம் காணலாம். அதைவிட இன்னும் பல மடங்கு அதிகமாக மக்களை உபசரிக்கும் தன்மை சின்னராசா அவர்களிடமிருந்தது. அவருடைய வீட்டில் எந்தநேரமும் குறைந்தது பத்துப்பதினைந்து பேராவது இருந்து அவருடன் பேசிக்கொண்டிருப்பார்கள். எல்லோரையும் உபசரித்து உண்ணவைத்து மகிழும் இவருடைய வீட்டுக்குப் போய்விட்டு எவரும் இலேசாகத் திரும்பிப்போக முடியாது.

இந்தியாவில் இவர் இருக்கும் பொழுது அங்கு சென்ற பலர் அங்கும் இத்தகைய அனுபவத்தைப்பெற்றிருக்கின்றனர் ஈழத்திலிருந்து அவருடைய வீட்டுக்குச் சென்ற பலரை அவருக்குத் தெரியாதிருந்தாலும்கூட அவர்களை உபசரித்து நாள்கணக்கில் அங்கு தங்கவைத்து அவர்களுக்கு ஆகவேண்டிய உதவிகளைச் செய்ததைப் பலரும் பாராட்டிக் கூறுவர்.

தனது சொந்த நாட்டைப் போலவே எந்த நாட்டுக்குப் போனாலும் அங்கெல்லாம் அவர் செல்வாக்குப் பெற்றிருந்தார். இந்தச் செல்வாக்கைக் கொண்டு மற்றவர்களுக்கு எண்ணற்ற உதவிகளைச் செய்துள்ளார் தமிழ் நாட்டிலே முதலமைச்சர்கள் தொடக்கம் எல்லோருடனும் பழகும் வாய்ப்பு அவரது தவில்கலை வித்துவத்தினால் தான் ஏற்பட்டது. 1945 ஆம் ஆண்டு இசைத்துறையில் யாழ்ப்பாணத்தின் பெயரை நிலைநாட்டியவர் இசைப் புலவர் ந.சண்முகரத்தினம் அவர்கள். 'யாழ்ப்பாணம் சண்முகரத்தினம்' என அவருடைய பெயர் இந்திய வானொலியில் அறிவிக்கப்பட்டு வந்தது. அவரைத் தொடர்ந்து காலத்துக்குக்காலம் ஒவ்வொருவர் யாழ்ப்பாணத்தின் பெயரை நிலைநாட்டி வந்தனர். சங்கீத பூஷணம் பரம் தில்லைராஜா, நாதஸ்வர வித்துவான்களான முருகையா. அப்புலிங்கம். பி எஸ். ஆறுமுகம் பிள்ளை, என். கே. பத்மநாதன் ஆகியோர்; சங்கீத வித்துவான்கள் கருணாகரன், என். வி. எம். நவரத்தினம், ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகள், தவில் வித்துவான்கள் தட்சணாமூர்த்தி, எம். கே. கணேசன், என். ஆர், சின்னராசா என்று இந்த வரிசையில் இன்னும் ஓரிருவரின் பெயர் நினைவிற்கு வரவில்லை. இவர்களெல்லோரும் இந்திய வானொலியில் 'யாழ்ப்பாணம்' என்ற அடைமொழியுடன் அழைக்கப்படுவர்.

'யாழ்ப்பாணம் சின்னராசா' என்று அறிவிக்கப்படாததால் சில கச்சேரிகளில் வாசிக்க மறுத்தவர் சின்னராசா அவர்கள்,

1980 இல் நடைபெற்ற விவேகானந்தர் விழாவிலும். அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற நாவலர் விழாவிலும் இசை வழங்கத் தமிழகத்து இசைக்கலைஞர்களான ஏ கே.சி. நடராஜன், சேலம் ஜெயலக்ஷ்மி போன்றோரை இங்கு அழைப்பிக்க முன்னின்று உதவியவர் சின்னராசா அவர்கள். அதே போன்று சீர்காழி கோவிந்தராஜன், மதுரை சோமசுந்தரம், சூலமங்கலம் சகோதரிகள், பாலமுரளி கிருஷ்ணா போன்ற இசைக்கலைஞர்களையும்இங்கு அழைப்பித்து இசைக்கச்சேரிகள் நடாத்தஉதவியவர் சின்னராசாஅவர்கள்.

உடல்தளர்ந்து, முன்போல் நீண்ட நேரம் வாசிக்க முடியாதிருந்த போது, அவரது கற்பனையில் வரும் பல்வேறு லயவடிவங்களையும் வாயினால் ஒப்புவித்து அவற்றை ஒலிப்பதிவு செய்து அடுத்த தலைமுறையினருக்கு உதவ வேண்டுமென அண்மையில் நான் அவரிடம் வேண்டிக் கொண்ட போது மிகவும் ஆவலுடன் அதை வரவேற்று, தனது உடல் நிலை சற்றுச் சீரானதும் தனது முக்கிய நண்பர்களுள் ஒருவரான பொன். சுந்தரலிங்கம் அவர்களின் உதவியோடு அதைச் செய்யப்போவதாக எனக்குக் கூறியிருந்தார். 108 தாளங்களில் பஞ்சநடைகளிலும் அஸ்வகதி, மர்க்கடகதி, கஜகதி, ஹம்ஸகதி, மயூரகதி. குக்குடகதி என்னும் பல்வேறு கதிகளை உணர்த்தும் பாங்கில் விரிவானதொரு லயவிந்நியாசத்தை ஒலிப்பதிவு செய்து வைக்கும் நோக்கம் அவருக்கு அதன் பின் ஏற்பட்டிருந்தும், இசையுலகத்துக்கு அது பிரயோசனப் படமுடியாதவாறு அவரை நாம் இழந்து விட்டது எமது துரதிர்ஷ்டமே. இருப்பினும் அவர் மக்களாகிய ரவீந்திரன், சுதாகரன் இருவரிடமும் இசையுலகம் நிரம்ப எதிர்பார்க்கிறது.

நாவலியூர்
நா. சச்சிதானந்தன்

இத்தகைய ஒரு மாமேதை மக்களிடையே எத்தகைய மதிப்பைப் பெற்றிருந்தார் என்பது அவரது இறுதிச் சடங்கின்போது நன்குபுலப்பட்டது. அரசாங்க அதிபருட்படப் பல உயர் அதிகாரிகள், பத்திரிகைத் துறையினர், பல்கலைக் கழகத் துணைவேந்தர் உட்படப் பல்வேறுபீடாதிபதிகள், கல்விமான்கள், ஆதீன முதல்வர், கலைத்துறையோடு சம்பந்தப்பட்ட பல்வேறு தரத்தினர், கலைஞர்கள் ரசிகர்கள், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கலை, கலாசாரப் பிரிவின் மேலாளர்கள், சாதாரண பொதுமக்கள் எனச் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினருமாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் இவரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியமை இசையுலக வரலாற்றில் அழியாத இடம் பெற வேண்டிய இன்னொரு அம்சமாகும்.

சின்னராசா அவர்கள் உலக சமுதாயம் முழுவதிலுமுள்ள மிக முக்கிய மனிதர்களுள் (VIP) ஒருவராகக் கணிக்கப்பட்டு உலக சமுதாயத்தின் அழியாச் சொத்தாகி விட்டார்.

(முற்றிற்று)

---

# தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்த தமிழகஅரசு
# மேலதிக நிதி கேட்கிறது!

தமிழகத்தில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த மேலதிக நிதி வழங்குமாறு தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளது.

தற்பொழுது தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் இடம்பெறும் பஞ்சாப், காஷ்மீர், அஸாம் மாநில அரசுகளுக்கு மததிய அரசு மேலதிக நிதியை வழங்கி வருகின்றது.

அதே போன்று தமிழக அரசுக்கும் மேலதிக நிதியை வழங்க வேண்டுமென மத்திய அரசைக் கேட்டுள்ளது தமிழக அரசு.

---

## அலுவலகம் இடமாற்றம்

யாழ், கண்டி வீதியில் இயங்கி வந்த யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் தற்போது 201/1, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

தம்பையா சிவகுரு என்பவரின் அடையாள அட்டைஇல343180950V சாவகச்சேரிக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முரசொலி காரியாலயத்தில் ஒப்படைக்கவும். அல்லது சாவகச்சேரி பரம்ஸ் முரசொலி பத்திரிகை விற்பனைக் கடையில் ஒப்படைக்கவும். 07072


---

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
## வேண்டுகோள்

தமிழீழ மண்மீட்புப் போரில்

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆனையிறவு முகாம்தகர்ப்பில் வீரமரணமடைந்த வீரவேங்கைகளுக்கு வீரவணக்கத்தையும், கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றது.

இப்போரினால் ஏற்பட்டிருக்கும் அவசரமானதும், முக்கியமானதுமான கீழ்வருவனவற்றைச் செய்வது நம் கடமையாகும்.

அ) இரத்ததானம்
(ஆ) காயப்பட்ட போராளிகளைப் பராமரித்தல்
(இ) உலர் உணவு, ஏனைய பொருள்களைச் சேகரித்தல்

இப்பணிகளை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றிணைந்து செய்யுமாறும், இரத்ததானம் செய்ய விரும்புவோரும், காயப்பட்ட போராளிகளைப் பராமரிக்க விரும்புவோரும் ஆஸ்பத்திரி வீதியில் இருக்கும் பாலம் அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறும். சேகரித்த பொருள்களை இக்காரியாலயத்தில் ஒப்படைக்குமாறும் வெகு வினயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

த. மகாசிவம்
பொதுச் செயலாளர்

442, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

07073

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் சண்முகம் ஆனந்தமகேசன்

அன்னை மடியில் 19. 01. 1952 — அரன் அடியில் 27. 06. 1990

திதி:- 16. 07. 1991 (செய்வாய்க்கிழமை)
(பூர்வ பட்ச பஞ்சமி திதி)

அன்பு மகேசனே நீர் மறைந்து வருடம் ஒன்றானாலும் விநாயகர் மேல் வைத்த பற்றுதலும், செய்த திருப்பணிகளும் எம் மனதை விட்டகலா. உம்மால் கட்டித்தரப்பட்ட வசந்த மண்டபம் அதனை என்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் நீர் இருந்திருந்தால் இவ்வாலயத்தில் ரதம் கூட உருவாகியிருக்கும். உமது ஆத்மா சாந்தியடைய கணநாதனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!!

ஆலயபிரதம குரு
து. விவேகானந்தா குருக்கள்.

யாழ் வண்-கிழக்கு,
கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயம்

07070

★ பலாலியிலிருந்து ஷெல் வீச்சு;

## வடமராட்சியில் எழுத்தாளர் குடும்பமும்

# தென்மராட்சிவிரிவுரையாளரும்பலி!

நேற்று முன்தினம் நள்ளிரவுக்குப்பின் பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்களினால் தென்மராட்சியில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரும், வடமராட்சியில் பிரபல எழுத்தாளரும் அவரது குடும்பத்தினரும் பலியானார்கள்.

வடமராட்சியில் நெல்லியடியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் பிரபல எழுத்தாளர் நெல்லை க. பேரன் (க. பேரம்பலம்) மற்றும் அவரது மனைவி, இருகுழந்தைகள் ஆகியோர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

தென்மராட்சியில் நுணாவிலில் விழுந்து வெடித்த ஷெல்லினால் யாழ் பல்கலைக்கழக அரசியல்துறை உதவி விரிவுரையாளர் கே. இரஞ்சகுமார் (29) ஸ்தலத்தில் பலியானார். (10-11- 74 39)

# மண் மீட்புப் போர்ச் செய்திகள்

## களத்தில் காயமடைந்தோருக்கு உதவுவதில் மக்கள் போட்டா போட்டி

காயமடைந்த, மற்றும்களத்தில் போராடும் போராளிகளுக்காக குடா நடாட்டின் பல பகுதிகளிலிருந்தும் உதவிகள் மக்களால் வியாபித்த அளவில் வழங்கப்பட்டு வருகின்றன.

துணிவகைகள், செவ்விளநீர், உலர் உணவுப் பொதிகள் என்பனவும் இவற்றில் அடங்கும்.

பாடசாலை மாணவர்களும், தொண்டர்களும் இவற்றைச் சேகரிப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

யுத்தத்தில் காயமடையும் போராளிகளுக்கு இரத்தம் வழங்க யாழ் போதனா வைத்தியசாலைக்கு முண்டியடித்துச் செல்வோர் தொகை அதிகரித்து வருவதாக எமது வைத்தியசாலைச் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

## விவரம் சேகரிப்பு

ஆனையிறவில் இடம்பெற்ற மோதல்களையடுத்து வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்த மருதங்கேணி தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான மக்களைப் பற்றிய விவரங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், செஞ்சிலுவைச் சங்கமும் சேகரித்து வருகின்றன. 50

## யாழ்-கண்டி வீதியில்

### மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து

களத்தில் காயமடையும் போராளிகளை விரைவாகத் தடையின்றி வைத்தியசாலைகளுக்கு எடுத்துச்செல்லும் பொருட்டு யாழ்—கண்டி வீதியின் பல பகுதிகளில் போக்குவரத்து மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

கண்டிவீதியின் யாழ் நகர்ப் பகுதி, நாவற்குழி—சங்கத்தானை ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பகுதிகளில் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ளோரும், அவசரகருமங்களுக்காகச் செல்வோரும் மட்டுமே பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்

## தென்மராட்சிப் பகுதியில் ஹெலியிலிருந்து கிறனைட் வீச்சு

நேற்று முன்தினம் மாலை தென்மராட்சிப் பகுதியில் ஹெலிகொப்டரிலிருந்து கிறனைட்வீச்சு நடாத்தப்பட்டது மாலை 6 மணி போல் கொடிகாமம் சந்தைக்கு அருகில் ஹெலியிலிருந்து வீசப்பட்ட கிறனைட் ஒன்று வீட்டுப் பிளேட்டில் விழுந்து வெடித்ததினால் வீட்டினுள் இருந்தோர் மயிரிழையில் உயிர்தப்பினர்.

## காவற்துறையின் சேவைக்கு பரவலான பாராட்டு

தமிழீழ காவற்துறையினர் யாழ் கண்டிவீதியால் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் தற்பொழுது ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வீதியில் சன நெருக்கம் கூடிய பகுதிகளில் சீருடை அணிந்த தமிழீழக் காவற்துறையின் போக்குவரத்துப் பிரிவினர் காலை 5 மணி முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்

தமிழீழ காவற்துறையினரின் சிறப்பான இச் சேவையை பொதுமக்களும், பொது அமைப்புக்களும் பாராட்டியுள்ளன.

தேவையைப் பொறுத்து காவற்துறையினரின் சேவை விஸ்தரிக்சுப்படுமெனவும் தெரியவருகின்றது,

## கப்பலில் இருந்து தாக்குதல்

நேற்று முன்தினம் இரவு பலாலி இராணுவ முகாமிலிருந்து தென்மராட்சிப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட கடும் ஆட்லறி ஷெல் தாக்குதலினால் பலர் காயமடைந்துள்ளனர்.

சங்கத்தானையில் இச் ஷெல் வீச்சினால் ஒருவர் மரணமாகியது வாசகர் அறிந்ததே.

கொடிகாமம் பகுதியில் அடுத்தடுத்து விழுந்த ஷெல்களினால் மூன்று வீடுகள்சேதமடைந்தன.

பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல் நடந்துகொண்டிருந்த அதே வேளை வடமராட்சி கிழக்குப் பகுதிக் கடலில் நிலை கொண்டுள்ள கடற்படைக் கப்பலில் இருந்து பச்சிலைப்பள்ளிப் பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

## மாவீரர்களின் புகழுடல்கள்

### இராணுவ மரியாதையுடன் தகனம்

ஆனையிறவு, கட்டைக்காடு மோதல்களில் வீரமரணமடைந்த மாவீரர்களின் புகழுடல்கள் கொடிகாமம், கோப்பாய், துணுக்காய் பகுதிகளிலுள்ள மாவீரர் மயானங்களில் இராணுவ மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டு வருகின்றன.

அந்தந்தப் பகுதிகளிற் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக மாவீரர்களின் புகழுடல்கள் வைக்கப்பட்டுப், பின்னர் அவை எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படுவதாக எமது நிருபர்கள் அறிவிக்கின்றனர்.

## கழிவுகள் அகற்றப்பட்டன

யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்கள் முக்கிய பகுதிகளைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

வைத்தியசாலைக் கழிவுகளை அகற்றுவதற்கு மாநகரசபைக்கு எரிபொருள் பற்றாக்குறை தடையாக உள்ளபடியினால் மாணவர்கள் அங்கு தேங்கிக் கிடந்த குப்பைகளை அகற்றிக் கிடங்குகளில் புதைக்கும் வேலைகளில் ஈடுபட்டனர். (74)

## நாங்கள் கரும்புலிகள் ......... எங்கும் உணர்ச்சிக் கீதம்

கரும்புலிகள் மூலம் நிலைநாட்டப்படும் ஈடில்லாச் சாதனைகளை துல்லியமாக வெளிப்படுத்தும் 'நாங்கள் கரும்புலிகள்.........' என்ற பாடல் தற்பொழுது குடாநாடு எங்கும் ஒலிபரப்பிகள் மூலம் ஒலி பரப்பப்பட்டு வருகின்றது.

நாங்கள் கரும்புலிகள் என்றவாறாக அமைந்துள்ள இந்த உணர்ச்சிக் கீதத்தை மக்கள் அவ்வவ் இடங்களில் நின்ற படி மெய்மறந்து உணர்ச்சி பூர்வமாக அதில் ஒன்றிய நிலையைக் காணமுடிகிறது.

கரும்புலிகள் புரியும் தீரத்தை, தியாகத்தை இக்கீதம் வெளிப்படுத்துகின்றது.

## 'குமுதினி' கடற்படை வசம்; வலம்புரியை மீட்க அரச அதிபர் முயற்சி!

குறிகாட்டுவான்- நெடுந்தீவு மார்க்கத்தில் பல வருடங்களாகச் சேவையாற்றி வந்த குமுதினிப் படகு தற்பொழுது பழுதடைந்த நிலையில்சேவை நிறுத்தப்பட்டு கடற்படையினரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதனால் நெடுந்தீவு மக்கள் பிரயாணம்செய்யத்தக்கவகையில் சேவையாற்றுவதற்கு ''வலம்புரி'' படகைத்தந்துதவுமாறு யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் காரைநகர் கடற்படை அதிகாரியைக்கேட்டுள்ளார். (19)

## மடிச்சுக்கட்டித் தாக்கம் அதிகரிப்பு 445 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

அரியாலை நாகபடுவான் குளத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சிறுபோக நெற்செய்கை மடிச்சுக்கட்டி, சந்துகட்டி நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றமையால் பெரும்பாதிப்பை எதிர் நோக்கியுள்ளது.

இந்நோய்களை தடுப்பதற்கு பூநகரி—முழங்காவில் பிரிவு விவசாயப்பகுதி போதிய உடன் நடவடிக்கையை எடுக்கவில்லை எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குடலைகள், கதிர்கள் வரும் காலத்தில்பயங்கரமானமுறையில் இவை பரவிவருகின்றன. இக்குளப்பாய்ச்சலில் 445 ஏக்கரில் நெற்செய்கைல் மேற்கொள்ளப்படுகின்றது. (ப-35)

## மாத்தளைப் பகுதியிலுள்ள 25 தோட்டங்களில் தேடுதல்

மாத்தளைப் பகுதியிலுள்ள இருபத்தி ஐந்து தோட்டங்கள் பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டுச் சோதனையிடப்பட்டதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேடுதலின்போது பல தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுப் பொலிஸ் நிலையங்களுக்குக் கூட்டிச்செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அஸாமில் 16 லட்சம் பேர் பாதிப்பு

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் 2000 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகஅறிவிக்கப்படுகின்றது.

பிரமபுத்திராநதி பெருக்கெடுத்ததைத் தொடர்ந்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வெள்ளப் பெருக்கினால் 16 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர், எழுவர் உயிரிழந்துள்ளனர்.

## மாணவர் கூட்டம்

திறந்த பல்கலைக்கழக யாழ் பிரதேச நிலையத்தில் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு மாணவர்களது பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் மாணவர் அவைத் தேர்தல் தொடர்பாகவும் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

அனைத்துக்கற்கைநெறி மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு திறந்த பல்கலைக்கழக மாணவர் அவை கேட்டுள்ளது. ப 7)

## மண்ணெண்ணெய் விநியோகம்

சித்தன்கேணி கலைநகர் நேருஜி ஐக்கிய நாணய சங்கத்தினர் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவரும் தமது உறுப்பினர்களுக்கு இலவசமாக மண்ணெண்ணெய் வழங்கி வருகின்றனர். (12)

கடந்த மாதம் கோலாகலமாக நடந்த முத்தமிழ்விழாவில் 'நெஞ்சினில்நெருப்பேந்திவாருங்கள்!' என்றதலைப்பில் கவியரங்கம் இடம் பெற்றது. அரங்கில் ஒலித்த கவிதைமுத்துக்கள்சிலவற்றைக் கோர்த்துத் தருகிறோம்.

கோர்வை 1

## தூய போர்!

''அடிபுலியை!'' என்றான் கே. சி. பந்து-இதோ
அழிப்போம் புலியை என்றிசைத்தான் சிந்து!
ஐயா பந்து! காற்றுப்போன பந்து!- நீரும்
அமைதிப்படையும் புகுந்த தெந்தப் பொந்து?!

★

தலையை எண்ணித் தப்புக்கணக்குப் போட்டோம்!
-புலியின்
வலிமை மனோவலிமை! வெல்ல மாட்டோம்.
என்று கூறிச் சர்தேஷ் பாண்டே நின்றான்!-அதை
ஏற்றிடாதோன் கோழி பிடித்துத் தின்றான்!

★

கொப்பேக்கடுவ சொன்னார் நாட்கள் பத்து!
-டொக்ரர்
பிறேமா சொன்னார் கணக்காய் மாதம் பத்து!
பிறக்கவில்லை வெற்றிப்பிள்ளை!
பிறக்கப் போவதினியும் இல்லை!
செருப்பைக் காலிற் தேடிப் பெற்றீர் பிறேமா!
-அதைத்
தேடித் தலையில் உழுதும் அழியலாமா?

★

கட்டில் உடுவிலில்! கதிரை தாவடியில்!
தொட்டில் இணுவில்! தொலைக்காட்சி வானொலி
பெட்டி நல்லூரில! பெண்டியர் பிள்ளைகள்
கொட்டடிதன்னில்! குலைந்தே இப்படி
இடுப்பில் ஒன்றாய்; இழுபட ஒன்றாய்;
நடக்கிறார் நாலூர்''எண்பது'' பலவும்!
ஆயினும் இந்த அறமறப் போரை
தூயதென் றேத்தித் தொழுகிறார் நெஞ்சால்!
அப்பா நிற்கிறார் அரிசிக் கியூவில்!
அப்பளமாய் எண்ணெய்க் கியூவில் அம்மா!
தம்பி சோப்புக்கியூவில்! தங்கை
வெம்பி வேகிறாள், வாங்கிடச் சீனி!
வாழத் தவிக்கும் வறுமையின் நடுவும்;
தோளைக் கொடுத்துச் சுதந்திரப் போர்க்கு
எண்பது கள்பல இயங்குதல் உண்மை!

(வளரும்) -கவிஞர், ச. வே. பஞ்சாட்சரம்

## யாழ் ஆயுள்வேதக் கல்லூரி இறுதி ஆண்டுப் பரீட்சை

யாழ்ப்பாணத்தில் உள்ள லங்கா ஆயுள்வேதக் கல்லூரியில் பயின்ற மாணவர்களுக்கான டி. ஏ. எம். பட்டத்திற்கான இறுதி ஆண்டுப் பரீட்சைத் திகதி இன்னமும் கொழும்பிலுள்ள ஆயுள்வேதத் திணைக்களத்தினால் அறிவிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கல்லூரியின் உப அதிபர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி கொழும்பிலுள்ள ஆயுள்வேத ஆணையாளருடன்சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க மூலம் தொடர்புகொண்டு விசாரித்த போது இப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்ட பின்பு பரீட்சைக்கான திகதி பற்றி தாம் அறிவிப்பதாகக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் இது தொடர்பான விவரங்களை யாழ் லங்கா ஆயுள்வேதக் கல்லூரியுடன் நேரில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப் படுகின்றது. 13

● பிரெஞ் பிரதமர் அறிவிப்பு

## சட்டவிரோத குடியேற்றக்காரர் விமானம் மூலம் வெளியேற்றம்?

பிரான்ஸை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்ட சட்டவிரோத குடியேற்றவாசிகள் மீண்டும் அங்கேயே இரகஸியமாகத்தங்கியிருப்பதைத் தடுக்க அவர்களை உடனடியாக ஏற்றிச்செல்ல விசேஷ விமான சேவையை பயன்படுத்துவது குறித்து பிரெஞ் அரசு ஆலோசித்து வருகிறது.

இத்தகவலை வெளியிட்ட பிரெஞ் பிரதமர் எடித் கிரெஸ்ஸன், ஒருவர் வெளியேற்றப்படவேண்டும் என நீதிபதி உத்தரவிட்டால் அவர் வெளியேற்றப்பட்டு விட்டாரா என்பதை நிச்சயப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளேன்என்றார்.

இதேவேளை சட்டவிரோதக் குடியேற்றக்காரரை வெளியேற்ற வேண்டும் என தீவிரமாக உள்ள வலதுசாரி தேசிய முன்னணி சமீபத் தேர்தலில் 18 சதவீத வாக்குகளையே பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரெஞ் அரசிடம் 1,20,000 பேர் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். இவர்களில் 20,000 பேர்களின் கோரிக்கை ஏற்கப்படும் எனவும் பிரதமர் கிரெஸன் தெரிவித்தார்.

இதேவேளை பிரதமரின் வெளியேற்றப்படுவது குறித்தான அறிவிப்பை அமைச்சரவையில் உள்ள கறுப்பினத்தவரான சமூகவிவகார அமைச்சர் கொபியம்னானே கண்டித்துள்ளார். 33

## பெற்றோல், டீசல் விலை குறைக்கப்படமாட்டாது

உலகச் சந்தையில் டீசல், பெற்றோல் விலை குறைந்தாலும் நாட்டில் அவற்றின் விலை குறைக்கப்படமாட்டாது என சக்தி வலு அமைச்சர் சந்திராபண்டார பாராளுமன்றத்தில் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பி யான நிமால் சிறிபால கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

1990 டிசம்பரில் அரசாங்கம் பெற்றோல், டீசல் விலைகளைக் குறைத்தது. ஆனால் வளைகுடா யுத்தத்தால் இவ்வாண்டு ஆறு மாதகாலத்தில் 160 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டது என்றும் அமைச்சர் கூறினார். 33

## நம்பிக்கை வாக்கெடுப்பு காங்கிரஸ் அரசு தப்பியது

பிரதமர் நரசிம்மராவின் காங்கிரஸ் அரசு நேற்று இந்தியப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கைத் தீர்மான வாக்கெடுப்பில் வெற்றி பெற்று விட்டது.

ஆளும்கட்சிக்கு ஆதரவாக 241 வாக்குகளும் எதிராக 112 வாக்குகளும் கிடைத்தன வாக்கெடுப்பில் பிரதான எதிர்க்கட்சிகளான பாரதிய ஜனதா, தேசிய முன்னணி என்பன எதிர்த்து வாக்களித்தன, மாக்ஸிய கம்யூனிஸ், தெலுங்கு தேசம், போவர்ட் புளோக் என்பன வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை

ஆளும்கட்சிக்கு ஆதரவாக முஸ்லிம்லீக், அ. தி. மு. க. என்பன வாக்களித்தன.

ஒரு கட்சி பெரும்பான்மை பெறும் காலம் போய்விட்டது என விவாதத்தின் முடிவில் பேசிய பிரதமர் நரசிம்மராவ் குறிப்பிட்டார்.

## காணாமல் போனோர் பற்றி மரணச் சான்றிதழ்கள்

கடந்த காலங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பான விவரங்களை உரிய முறையில் விசாரணையின் போது சமர்ப்பித்தால் அவர்களின் மரணச்சான்றிதழ்களை வழங்கும்படி சட்டமா அதிபர் திணைக்களம் நாட்டிலுள்ள சகல மாவட்ட பதிவாளர் அலுவலகங்களுக்கும்அறிவித்துள்ளது.

காணாமல் போன ஒருவர் மரணமடைந்து ஐந்து வருடங்கள் கழிந்த பின்பே முன்பு மரணச்சான்றிதழ்களைப் பெற முடியுமென விதிமுறை இருந்தது.

இந்த விதிமுறை மாற்றப்பட்டு தற்பொழுது ஒருவர் காணாமல் போன சில மாதங்களிலேயே உரிய சாட்சியங்களுடன் தேவையான விவரப்பட்டியல்களையும் அடையாள அட்டையையும் பதிவாளரிடம் சமர்ப்பித்தால் மரணச்சான்றிதழைப் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. 33

## வடம. கிழக்கு அகதிகளுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

கடற்படை பீரங்கி மற்றும் விமானத் தாக்குதல்களால் இடம் பெயர்ந்த வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன.

இவர்கள் பருத்தித்துறை, குடத்தனை, நாகர்கோயில், அம்பன் ஆகிய பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதி கிராம சேவகர்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், செஞ்சிலுவைச் சங்கம் என்பனவும் இவர்களின் பெயர்களை நிவாரணம் வழங்கத் திரட்டி வருகின்றனர். 50

## முதல்வர் ஜெயலலிதா புதுடில்லி பயணம்

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று மாலை புதுடில்லி புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இவர் புதுடில்லியில் பிரதமர் நரசிம்மராவை சந்திக்கவுள்ளதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் ஜெயலலிதாவின் முதலாவது புதுடில்லிப் பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## 20 மாவீரர்களுக்கு உரும்பராயில் அஞ்சலி

நேற்று முன்தினம் ஆனையிறவில் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கைகள் இருபது பேரின் புகழுடல்கள் நேற்று பிற்பகல் 2 மணிமுதல் 2. 30 வரை உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கத்திலும் 2.30முதல் 4மணிவரை உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திலும் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது

பெருந்திரளான மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செய்தனர். பின்னர் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தீயுடன் சங்கமமாகியது. 48

## நெல்லை பேரனுக்கு இறுதி அஞ்சலி

ஷெல் தாக்குதலுக்குப் பலியான பிரபல எழுத்தாளரும், முன்னாள் பத்திரிகையாளரும், தற்போதைய தபால் திணைக்கள ஊழியருமான நெல்லை க பேரன் (க.பேரம்பலம்) அவரது மனைவி, இருபிள்ளைகள் ஆகியோரின் இறுதிச்சடங்குகளில் பெருந்திரளான பொதுமக்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவரதும், குடும்பத்தினரினதும் இறுதிச்சடங்குகள் நேற்று நெல்லியடியில் இடம் பெற்றது. (முன்வந்த செய்தி உள்ளே) 50

## பணிப்பாளர் தகவல்

## மலேரியாத் தடுப்பு வேலை நாடு முழுவதும் பாதிப்பு

நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக மலேரியாத் தடுப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக மலேரியாத் தடுப்பு இயக்கத்தின் பணிப்பாளர் டாக்டர் எல். சமரசிங்க கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

நாட்டில் வரட்சி, மாணிக்கக்கல் தோண்டுதல் சேனை விவசாயம் என்பன காரணமாக மலேரியாநோய் உண்டாகிறது என்றும் வடமத்தி, வடமேல் மாகாணங்களிலேயே இந்நோய் அதிகமாகப்பரவுகிறது என்றும் அவர் சொன்னார். 33

## இடமாற்றம்

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஐந்து கிராம சேவை அலுவலர்கள் உள்ளூருக்குள் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர். (19)

### வை 12...

முகாம் விடுதலைப்புலிகளினால் முற்றுகையிட்ட காலப்பகுதி முதல் ஹெலிகள் மூலம் குடிநீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டதையடுத்தே இளநீர், தேங்காய் போடும் முயற்சி எடுக்கப்பட்டது எனினும் படையினருக்கு ''கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை'' யெனத் தெரியவருகிறது. ப - 11

### புலிகளின்...

உள்ள விமானப்படையினரும் புலிகளின் கடும் எதிர்த் தாக்குதலுக்குள்ளாகினர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கரையிறக்கப்பட்ட படையினர் புலிகளின் அகோரத் தாக்குதலினால் முன்னேற முடியாதபடி கரையோரங்களிலேயே தங்கியுள்ளனர்.

பிந்திக்கிடைத்த தகவல் ஒன்றின்படி தரையிறங்கிய படையினர் தரப்பில் 50 இற்கும் அதிகமானோர் பலியானதாகவும் படையினரின் ஓர் படகு புலிகளின் கனரக ஆயுதங்களின் தாக்குதலில் தீப்பற்றி எரிந்ததாகவும் தெரியவருகிறது. (48-79)

## விடுதலைப் புலிகள் கண்டனம்

## போராட்டத்தை இழிவுபடுத்தும் இந்திய வானொலி!

ராஜீவ் காந்தி கொலையை விடுதலைப் புலிகளுடன் தொடர்புபடுத்தி இந்திய வானொலி அடிக்கடி செய்தி வெளியிட்டு வருவதை விடுதலைப் புலிகள் கண்டித்துள்ளனர்.

இந்திய வானொலி நீண்டகாலமாகவே தமிழர் போராட்டத்தைக்கொச்சைப் படுத்தும் வகையில் செய்திகளை வெளியிட்டு வந்தது. இதை இப்போது ராஜீவ் கொலை மூலம் இந்திய வானொலி தீவிரப்படுத்தியுள்ளது.

### குடாநாட்டில்—

கப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது

இதேவேளை ஆனையிறவு படையினருக்கு எதிரான மோதலில் களத்தில் நிற்கும் வீரவேங்கைகளுக்கு யாழ் குடாநாட்டுமக்கள் சிற்றுண்டி உணவுப்பொருள்களைவழங்கி வருகின்றனர்.

யாழ் போதனா வைத்தியசாலையில் காயமடைந்த போராளிகளுக்கு உதவுமுகமாக யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இரவு, பகல் சேவையை மேற்கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ப-11

### வவுனியா...

மேற்பட்ட இராணுவத்தினர் முன்னேற முயன்றவேளை விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதலையடுத்து இழப்புக்களுடன் பின்வாங்கியதும் தெரிந்ததே. ப-11

### துருப்புக்கள்...

அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டனராம்.

இதேவேளை வடமராட்சி கிழக்கில் சுமார் மூவாயிரம் துருப்புக்கள் இறக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆனையிறவை சூழ்ந்துள்ள புலிகளிடம் முகாம் வீழ்வதை இப்படையினரால் தடுக்கமுடியுமா எனவும் பி. பி. ஸி குறிப்பிட்டது.

## பென்சன் இருமாதமாக இல்லை

ரயில்வே பென்சன் பெறுபவர்களுக்கு கடந்த இரண்டு மாதகாலமாக வவுச்சர்கள் இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல் வடபிராந்திய போக்குவரத்து ஊழியர்களுக்கும் கடந்த ஐந்து மாதகால சம்பளமும் அரசினால் அனுப்பி வைக்கப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது ப-11

### விமானங்களை...

அதிகாரி குறிப்பிட்டார் என ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

5.000 அடிக்குக் கீழாகப் பறியும் விமானங்களை தாக்குவதற்குரிய ஆயுதங்களைப் புலிகள் கொண்டிருப்பதாகத்தாம் கருதுவதாக அவ்வதிகாரி குறிப்பிட்டாராம்.

## இன்று சமூகந்தரவும்

யாழ் பரியோவான் கல்லூரி லியோ கழக அங்கத்தவர்கள் இன்று காலை 8-30 மணிக்கு பாடசாலையில் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ★

பரியோவான் கல்லூரி இன்ரறக்ட் கழக உறுப்பினர்களின் கூட்டம் இன்று காலை 9மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளதால், உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ★

யாழ் பரி. யோவான் கல்லூரி சுண்டுக்குளி மகளிர் கல்லூரிகளைச் சேர்ந்த ஆண்டு 10க்கு மேற்பட்ட மாணவ மாணவிகளை இன்று காலை 9 மணியளவில் பாடசாலையில் கூடுமாறு அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்,

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 16.07.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.